நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

மதிப்புக் கூட்டப்பட்ட பொருள் தயாரிப்பு பயிற்சி முகாம்

First Published : 02 Jul 2012 01:19:57 PM IST

கரூர், ஜூலை 1: கரூர் மாவட்டம், வரவணையில் மதிப்புக் கூட்டப்பட்ட பொருள் தயாரிப்புப் பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

இந்திய பயிர்ப் பதனத் தொழிற்நுட்பக் கழகம், வேளாண் வணிகத் துறை, வேளாண் விற்பனைத் துறை ஆகியவை இணைந்து இந்தப் பயிற்சி முகாமை நடத்தின. பயிற்சி முகாமுக்கு குளித்தலை வேளாண் வணிக அலுவலர் அர்ச்சுனன் தலைமை வகித்தார்.

தஞ்சாவூரிலுள்ள இந்திய பயிர்ப் பதனத் தொழிற்நுட்பக் கழகத்தின் விஞ்ஞானிகள் சுரேஷ்பாபு, விக்னேஷ் ஆகியோர் மதிப்புக்கூட்ட பொருள் தயாரிப்பு குறித்த பயிற்சியை அளித்தனர்.

மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்கள் பற்றிய விவரம், அவற்றின் சந்தை நிலவரம், விளைப் பொருள்களின் விற்பனை நிலை போன்றவை குறித்தும், பயிர்ப் பதனத் தொழிற்நுட்பக் கழகம் மூலம் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் பல்வேறு விதமான பயிற்சிகள் குறித்தும் அவர்கள் பயிற்சியில் எடுத்துரைத்தனர். வரவணை மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் முகாமில் பங்கேற்றனர்.

முகாம் ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர் சுரேஷ்குமார் செய்திருந்தார்.

மூலிகைத் தாவரங்கள் சேகரிக்க மகளிர் தொழில் குழுக்கள் துவக்கம்

First Published : 02 Jul 2012 12:17:37 PM IST

விருதுநகர், ஜூலை 1: விருதுநகர் மாவட்டத்தில், புதுவாழ்வுத் திட்டம் சார்பில், வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்தில் மூலிகைத் தாவரங்கள் சேகரிக்கவும், பால் உற்பத்திப் பொருள்கள் தயார் செய்வதற்கும், மகளிர் தொழில் குழுக்கள் தொடங்கப்பட இருப்பதாக, புதுவாழ்வு திட்ட அலுவலர் கருப்பையா தெரிவித்தார்.

தமிழகம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் புதுவாழ்வுத் திட்டம் மும்முரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதேபோல், விருதுநகர் மாவட்டத்தில் வறட்சியான ஊராட்சி ஒன்றியங்களான நரிக்குடி, காரியாபட்டி, வத்திராயிருப்பு, சாத்தூர், வெம்பகோட்டை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் முதல் கட்டமாக இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம், கிராமங்களில் வறுமையில் வாடும் பெண்களை ஒருங்கிணைத்து குழு அமைத்து, தொழில் பயிற்சி அளிக்கப்படும். அதையடுத்து, அத்தொழில் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதே நோக்கமாகும்.

அந்த வகையில், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியக் கிராமங்களிலும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களை கண்டறிந்து, அவர்களை ஒருங்கிணைத்து, மகளிர் குழுக்களாக அமைக்கும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது.

மேலும், அந்தந்தப் பகுதிகளில் உள்ள சூழ்நிலைக்கேற்ப வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு, தொழில் செய்வதற்கு இத்திட்டத்தினால் தேவையான நிதி உதவியும் கடனாக அளிக்கப்படும். இதன்மூலம், பெண்கள் தங்கள் வாழ்வாதாரத்தினை உயர்த்திக் கொள்ளலாம்.

தற்போது, வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களைக் கண்டறிந்து ஒவ்வொரு கிராமங்களிலும் இக்குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இக்குழுக்களுக்கு அந்தந்த கிராமங்களில் சூழ்நிலைகேற்ப என்னென்ன வேலைவாய்ப்பு பயிற்சி அளிக்கலாம் என்பது குறித்து, புதுவாழ்வுத் திட்ட கூடுதல் இயக்குநர் சஜிவனா தலைமையில், தொழில் வல்லுநர்கள் குழுவினர் கடந்த வாரம் வத்திராயிருப்பு பகுதியில் ஆய்வுப் பணியை மேற்கொண்டனர் என்றார் கருப்பையா.

## பருவமழை பாதிப்புகளை தடுக்க கட்டுப்பாட்டு அறை அமைப்பு

First Published : 02 Jul 2012 10:26:10 AM IST

காஞ்சிபுரம், ஜூலை 1: பருவமழை பாதிப்பை வரும் முன் தடுக்கும் வகையில் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. அது 24 மணி நேரமும் செயல்படும் என்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் ஹனீஷ் சாப்ரா அறிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதில் மாவட்ட வருவாய் அலுவலர் சுதர்சன், வருவாய் கோட்ட அலுவலர்கள், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, தாம்பரம், மதுராந்தகம் வட்டாட்சியர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர். இதில் மாவட்ட ஆட்சியர் ஹனீஷ் சாப்ரா பேசியது:

தென்மேற்கு பருவ மழை பொழிவினால் ஏற்படக்கூடிய பாதிப்பினை வரும் முன் தடுக்கும் வகையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கட்டுப்பாட்டு அறையில் உள்ள 044 27237101 என்ற தொலைபேசி எண்ணிலோ அல்லது 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசியிலோ 24 மணி நேரமும் பொதுமக்கள் தொடர்பு கொள்ளலாம். இதற்காக சுழற்சி முறையில் பணியாளர்கள் நியமிக்கப்படுவர்.

தீயணைப்பு மற்றும் மீட்புத்துறை: பரும மழையால் பாதிக்கப்படக் கூடிய இடங்களில் உள்ள மக்களைப் பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு செல்லும் வகையில் உயிர் காக்கும் சாதனங்களைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் அவசர கால ஒத்திகையினை நடத்த வேண்டும்.

பொதுப்பணித்துறை: பருவ மழையால் பாதிக்கப்படக்கூடிய இடங்கள் எவை என முன்னரே அடையாளம் கண்டறிய வேண்டும். மக்களைப் பாதுகாப்பாகத் தங்க வைக்கும் வகையில் பள்ளிகள், சமுதாயக் கூடங்கள், தனியார் திருமண மண்டபங்களில் புயல் பாதுகாப்பு மையத்தினை ஏற்படுத்த வேண்டும்.

வெள்ளத்தினால் பாதிக்கப்படக்கூடிய இடங்களில் அடுக்கத் தேவையான மணல் மூட்டைகளைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். மழைநீர் தங்கு தடையின்றி வெளியேற முன்னெச்சரிக்கையாக கால்வாய்களைத் தூர்வார வேண்டும்.

சுகாதாரத்துறை: வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் தேவையான மருத்துவ உபகரணங்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். அவசர கால மருத்துவ உபகரணங்களுடன் கூடிய ஆம்புலன்சுகளையும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

ஆம்புலன்சுகள் நல்ல நிலையில் இயங்குகின்றனவா என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும். எந்தெந்த இடங்களில் ஆம்புலன்சுகள் நிறுத்தப்பட்டுள்ளன என்பது குறித்து வருவாய்க் கோட்ட அலுவலர்களுக்குத் தெரிவிக்க வேண்டு0ம்.

கால்நடைத் துறை: கால்நடைகளுக்கு தேவையான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். கால்நடைகளுக்குத் தேவையான தீவனங்களை போதிய அளவு இருப்பு வைத்திருக்க வேண்டும். தேவைப்படும் இடங்களுக்கு கால்நடைகளை இடமாற்றம் செய்யத் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

நுகர்பொருள் வாணிபக் கழகம்: வெள்ளத்தால் பாதிக்கப்படும் இடங்களுக்கு உணவுப் பொருள்களை உடனடியாகக் கொண்டு செல்லும் வகையில் அதற்கான வாகனங்கள் மற்றும் உணவுப் பொருள்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். பதட்டமான ரேஷன் கடைகள் எவை என்பதை முன்கூட்டியே கண்டறிந்து அது குறித்த அறிக்கையினை அனுப்பி வைக்க வேண்டும்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மீன்வளத் துறையினர் தேவையான கட்டுமரங்கள், படகுகளைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். பாதிப்பு ஏற்படக் கூடிய இடங்களை மின்சார வாரியம் முன்னரே கண்டறிந்து அவ்விடங்களில் மின்சார வழங்குவதை ஒழுங்குபடுத்த வேண்டும்.

இதே போல் நெடுஞ்சாலைத்துறை, காவல்துறை, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் என அனைத்துத் துறை அதிகாரிகளும் தங்கள் துறை சார்ந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கத் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்றார் ஆட்சியர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**எத்தனால் உற்பத்தியை துவங்க வேண்டும்**

பதிவு செய்த நாள் : ஜூலை 03,2012,02:53 IST

கருத்தை பதிவு செய்ய

மோகனூர்: "சர்க்கரை ஆலையில் கட்டப்பட்டுள்ள எத்தனால் உற்பத்தி ஆலை, பல ஆண்டுளாக உற்பத்தி துவங்காமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது. எத்தனாலை பெட்ரோலுடன் கலந்து விற்பனை செய்யும் திட்டத்தை, மத்திய அரசு உடனடியாக அமலுக்கு கொண்டு வரவேண்டும்' என, பேரவைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மோகனூர் சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்கத்தின், 29வது பேரவைக்கூட்டம், நவலடியான் திருமண மண்டபத்தில் நடந்தது. சங்கத் தலைவர் கந்தசாமி தலைமை வகித்தார். துணைத்தலைவர் எட்டிக்கன் வரவேற்றார். பொதுச் செயலாளர் வக்கீல் நடராஜன், சங்க வரவு, செலவு கணக்கை தாக்கல் செய்தார்.

கூட்டத்தில், மத்திய, மாநில அரசுகள், 2012-13ம் அரவை ஆண்டுக்கு டன் ஒன்றுக்கு, 3,000 ரூபாய் என கரும்பு விலை அறிவிக்க வேண்டும். கரும்பு வெட்டுக்கூலி, வாகன வாடகை முழுவதையும், ஆலை நிர்வாகமே ஏற்றுக்கொள்ள வேண்டும். கரும்பு வெட்டுக்கூலி அரவையாண்டு முழுவதும் ஒரே சீராக, ஊழல் இல்லாமல் கட்டுக்குள் இருக்க, ஆலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மத்திய, மாநில அரசுகள் தாறுமாறாக ஏற்றியுள்ள உர விலையைக் குறைக்க வேண்டும்.

கடுமையான உரத்தட்டுப்பாட்டை போக்கி, சீரான உர வினியோகம் மேற்கொள்ள வேண்டும். ஆலையின் சார்பில் கட்டப்பட்டுள்ள எத்தனால் உற்பத்தி ஆலையை கட்டுபடியாகாத விலை இல்லாத காரணத்தால், பல ஆண்டுகளாக உற்பத்தி துவங்காமலேயே கிடப்பில் போடப்பட்டுள்ளது.

எத்தனாலை, பெட்ரோலுடன் கலந்து விற்பனை செய்யும் திட்டத்தை, மத்திய அரசு காலம் தாழ்த்தாமல் உடனடியாக அமலுக்கு கொண்டு வரவேண்டும். அதனால், நாட்டுக்கு அன்னிய செலாவணி மிச்சம். கரும்பு விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும். ஆலை எத்தனால் உற்பத்தியை லாபத்துடன் துவங்க, மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக, சங்க புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். தலைவராக கந்தசாமி, பொதுச்செயலாளராக வக்கீல் நடராஜன், பொருளாளராக வரதராஜன், துணைத்தலைவர்களாக எட்டிக்கன், தங்கவேல், துணைச் செயலாளர்களாக கனகராஜ், நவலடி மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

**காய்கறிகளின் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜூலை 03,2012,03:20 IST

திண்டுக்கல் : தென் மேற்கு பருவமழை பெய்யாததால் காய்கறிகளின் விலைகள் ஏறத் துவங்கியுள்ளன.

அனைத்து விதமான காய்கறிகளையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்வதோடு அதற்கான விலையை நிர்ணயம் செய்வதில் திண்டுக்கல் காந்தி மார்க்கெட் முன்னணியில் உள்ளது. இங்கிருந்து அனைத்து பகுதிகளுக்கும் காய்கறிகள் தினமும் கொண்டு செல்லப்படுகின்றன. ஜூனில் பெய்ய வேண்டிய தென் மேற்கு பருவமழை இன்னும் பெய்யவில்லை.

காய்கறிகளின் வரத்து முற்றிலுமாக குறைந்துள்ளது.

நேற்றைய நிலவரப்படி சாதாரண பச்சைமிளகாய் கிலோ ரூ.70 க்கு விற்பனை செய்யப்பட்டது. கடந்த 2நாட்களில் ரூ.20 வரை அதிகரித்துள்ளது.

நாட்டு தக்காளி கிலோ ரூ.28 ல் இருந்து ரூ.40 ஆக அதிகரித்துள்ளது. கேரட் ரூ.30 லிருந்து ரூ.35 ஆகவும், சவ்சவ் ரூ.16 ல் இருந்து ரூ.24 ஆகவும், பாகற்காய் ரூ.25 லிருந்து ரூ.40 ஆகவும், முருங்கை ரூ.20 லிருந்து ரூ.30 ஆகவும், கத்தரிக்காய் ரூ.26 ல் இருந்து ரூ.30 ஆகவும், புடலங்காய்

ரூ.20லிருந்து ரூ.24 ஆகவும், கருணை கிழங்கு ரூ.30 லிருந்து ரூ.40 ஆகவும், பல்லாரி ரூ.12 லிருந்து ரூ.14 ஆகவும் அதிகரித்துள்ளது.

## நாவல்பழம் கிலோ ரூ. 300: சீஸன் நிறைவால் விலை உயர்வு

பதிவு செய்த நாள் : ஜூலை 03,2012,02:48 IST

ஈரோடு: ஈரோட்டில், சீஸன் நிறைவால் நாவல் பழத்தின் விலை விண்ணைத் தொட்டுள்ளது. நேற்று கிலோ, 300 ரூபாய்க்கு விற்பனையானதால், மக்கள் அதிர்ச்சியடைந்தனர்.
சித்த மருத்துவத்தில் வரப்பிரசாதமாக கருதப்படும் பழங்களில், நாவல் பழத்துக்கு முக்கிய இடம் உண்டு. துவர்ப்பு சுவை கொண்ட நாவல் பழத்தை சாப்பிட்டால், சர்க்கரை நோய் கட்டுக்குள் வரும் என்பது, சித்த மருத்துவர்களின் கருத்து. வைகாசி மாதத்தில் சந்தைக்கு விற்பனைக்கு வரும் நாவல் பழத்தை, அனைத்து தரப்பு மக்களும் விரும்பி சுவைக்கின்றனர்.சில மாதத்துக்கு முன் நாவல் பழம் சீஸன் துவங்கியது. சீஸன் துவக்கத்தில் கிலோ, 180 ரூபாய் முதல், 200 ரூபாய்க்கு நாவல் பழம் விற்பனையானது. விரைவில், சீஸன் நிறைவடைய உள்ளதால், நேற்று ஒரு கிலோ நாவல் பழம், 300 ரூபாயாக விலை உயர்ந்து, மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.
நாவல் பழ வியாபாரிகள் கூறுகையில், ""சீஸனில் மட்டும் லாபம் தரும் நாவல் பழ மரத்தை விவசாயிகள் வளர்க்க விரும்புவதில்லை. கர்நாடகா, கேரளா, ஒரிஸா உள்ளிட்ட பகுதிகளில் இருந்து நாவல் பழங்கள், தமிழகத்துக்கு இறக்குமதி செய்யப்படுகிறது.
""சென்றாண்டில் ஒரு கிலோ, 150 ரூபாய்க்கு விற்பனையான நாவல் பழம், இந்தாண்டு சீஸன் துவக்கத்திலேயே, 180 ரூபாய்க்கு விற்பனையானது. அடுத்த வாரத்திலேயே 200 ரூபாய்க்கு விற்கப்பட்டது. சீஸன் நிறைவால், தற்போது, 300 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. நாவல் பழ விற்பனையிலேயே, கிலோ, 300 ரூபாய்க்கு விற்பனையாவது, இதுதான் முதல் முறை," என்றனர்.

## கோழிக்கொண்டை பூ விளைச்சல் ஜோர்

பதிவு செய்த நாள் : ஜூலை 03,2012,02:48 IST

ஈரோடு: பெருந்துறையில் கோழிக்கொண்டை பூ வளர்ப்பில் விவசாயிகள் அதிகம் ஈடுபட்டுள்ளனர். இம்மாதம் திருமண சீஸன் அதிகமாக இல்லாததால், செடியிலேயே பூக்கள் வாடுகின்றன.எந்த பூக்களை கொண்டு தொடுத்த மாலையானாலும், மாலைக்கு மேலும் அழகு சேர்க்க, பூக்களின் இடையே, இடைச்செறுகலாக பயன்படுவது கோழிக்கொண்டை பூ. திருமண சீஸனின் போது, கோழிக்கொண்டை பூக்களுக்கு கடும் கிராக்கி இருக்கும்.

விவசாய கூலியாட்கள் பற்றாக்குறை, பராமரிப்பு செலவு, போதிய லாபமின்மை உள்ளிட்ட பல காரணத்தால், கோழிக் கொண்டை பூ வளர்ப்பில், விவசாயிகள் ஆர்வம் காட்டுவதில்லை. ஈரோடு மாவட்டத்தில் ஒரு சில விவசாயிகளே, கோழிக்கொண்டை பூ வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.தற்போது, திருமண சீஸன் இல்லாததால், கோழிக்கொண்டை பூவை வாங்க ஆளில்லை. செடியிலேயே பூக்கள் வாடி வதங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. பெருந்துறை விவசாயிகள் கூறுகையில், ""பெரும்பாலும் மாலைகளில் அழகுக்காக கோழிக்கொண்டை பூ சேர்க்கப்படுகிறது. தற்போது திருமண சீஸன் இல்லாததாலும், மாலையில் கோழிக் கொண்டை பூவுக்கு பதில், வேறு சில பூக்களை சேர்க்க மக்கள் ஆர்வம் காட்டுவதாலும், கோழிக்கொண்டை பூவுக்கு மவுசு குறைந்து வருகிறது.

""விவசாயிகளிடம் கிலோ, 40 முதல், 45 ரூபாய் வரை கோழிக்கொண்டை பூவை விலைக்கு வாங்கி, பூ வியாபாரிகள், 60 ரூபாய்க்கு விற்கின்றனர். போதிய லாபமின்மையால், கோழிக் கொண்டை பூவை வளர்க்க விவசாயிகள் ஆர்வம் காட்டுவதில்லை," என்றனர்.

## விவசாயிகளுக்கு 20 லட்சம் தேயிலை நாற்றுகள் காட்டேரியில் தரம் பிரிக்கும் பணி துரிதம்

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2012,22:37 IST

குன்னூர் : தோட்டக்கலைத்துறை மூலம் குன்னூர் சுற்றுவட்டாரப்பகுதி விவசாயிகளுக்கு இந்தாண்டு 20 லட்சம் தேயிலை நாற்றுகள் வினியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.
நீலகிரியில் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. இந்த தொழிலில் 65 ஆயிரம் சிறு, குறு விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். பண பயிரான தேயிலை செடிகளை குறிப்பிட்ட காலத்தில் கவாத்து செய்ய வேண்டும். மேலும் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை செடிகளை அகற்றி, புதிய செடிகள் நடவு செய்தால் தான் மகசூல் போதுமான அளவு கிடைக்கும். இதற்காக விவசாயிகளுக்கு தோட்ட கலைத்துறை மூலம் இலவசமாக தேயிலை நாற்றுக்கள் வழங்கப்பட்டு வருகிறது.
நடப்பாண்டில் குன்னூர் சுற்றுவட்டாரப்பகுதி விவசாயிகளுக்கு 20 லட்சம் தேயிலை நாற்றுக்கள் வினியோகிக்க தோட்டக்கலைத்துறை முடிவு செய்துள்ளது.
இதன் பேரில் காட்டேரியில் உள்ள தோட்டக்கலை பண்ணையில் தேயிலை நாற்றுக்கள் வளர்க்கப்பட்டு வருகிறது. தற்போது இந்த நாற்றுக்கள் விவசாயிகளுக்கு வினியோகிக்க தயாராக உள்ளன. பண்ணையில் தேயிலை நாற்றுக்களை தரம் பிரிக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

## நீலகிரி சிறு தேயிலை விவசாய சங்க உறுப்பினர்களுக்கு சிறப்பு பயிற்சி

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2012,22:36 IST

மஞ்சூர் : நீலகிரி சிறு தேயிலை விவசாய சங்க உறுப்பினர்களுக்கு, மேற்குவங்கத்தில் தேயிலை குறித்தான ஒரு வார கால பயிற்சி அளிக்கப்பட்டது.

நீலகிரி மாவட்டத்தில் 60 ஆயிரத்திற்கு மேற்பட்ட சிறு, குறு தேயிலை விவசாயிகள் தேயிலை விவசாயம் மேற்கொண்டு வருகின்றனர். மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் தேயிலை விவசாயிகள் சிறு தேயிலை விவசாயிகள் சங்கம் அமைத்து, தனியார் தொழிற்சாலைகளுக்கு இலை வினியோகித்து நல்ல விலை பெற்று வருகின்றனர்.

இது போன்ற சிறு தேயிலை விவசாயிகள் சங்கங்களுக்கு குன்னூர் தேயிலை வாரியம் பல்வேறு உதவிகளை செய்து வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் தூனேரி, எப்பநாடு, ஒன்னதலை, பில்லிகம்பை, கீழ்குந்தா, டி.மணிஹட்டி, கம்பட்டி, சேலகுன்னா, அதிகரட்டி, கையுன்னி உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட சிறு தேயிலை விவசாயிகள் சங்கங்கள் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில், அந்த சங்கங்களில் உள்ள சிறு தேயிலை விவசாயிகள்; ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் என மொத்தம் 12 பேருக்கு குன்னூர் தேயிலை வாரியம் சார்பில் ஒருவார கால பயிற்சி மேற்குவங்கத்தில் அளிக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள டார்ஜிலிங், சிலிகுலி உள்ளிட்ட இடங்களுக்கு அவர்கள் அழைத்து செல்லப்பட்டு தேயிலை குறித்தான பயிற்சி அளிக்கப்பட்டது.

இது குறித்து குந்தை சிறு தேயிலை விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்பாளர் ஜியோ கூறியதாவது, ""குன்னூர் தேயிலை வாரியம் சார்பில் மேற்கு வங்கத்தில் அளிக்கப்பட்ட பயிற்சி மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. இந்த பயிற்சியின் மூலம் தரமான முறையில் அனைத்து இடங்களிலும் உற்பத்தி செய்ய இயலும்,"என்றார்.

## ஆவின் நிறுவனத்தில் புதிய பானம்

ஜூலை 02,2012,13:37

ஊட்டி : ஊட்டி ஆவின் நிறுவனத்தின் சார்பில் புதிய பானம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் (ஆவின்) 98 கிராமங்களை சேர்ந்த பால் உற்பத்தியாளர் சங்கங்கள் இணைக்கப்பட்டு, 37 ஆயிரம் சிறு விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர்.

aavin

"ஆவின்' நிறுவனம் மூலம் நெய், வெண்ணெய், பாலாடைக்கட்டி, பால் கோவா, பன்னீர், சுவை ஊட்டப்பட்ட பால், தயிர் போன்றவை தயாரிக்கப்பட்டு விற்கப்படுகின்றன.முதன் முறையாக மிக குறைந்த அளவு கொழுப்பு சத்து, அதிகளவு புரதச்சத்து மற்றும் தாது உப்புகள் கொண்ட பானம், 'ஸ்போர்டி' என்ற பெயரில் தயாரிக்கப்பட்டுள்ளது;
200 மி.லி., பாட்டில், 12 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதை, மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக், அறிமுகப்படுத்தி, முதல் விற்பனையை துவக்கி வைத்தார். இதை தவிர, 5 லிட்டர் நெய் விற்பனையையும் துவக்கி வைத்து கலெக்டர் பேசுகையில்,"ஆவின் பொருட்கள் நல்ல தரத்துடன், சுகாதார முறையில் தயாரிக்கப்படுகின்றன," என்றார்.

---

# தினகரன்

திராட்சையில் அதிக மகசூல் பெறுவது எப்படி விவசாயிகளுக்கு தோட்டக்கலை மாணவிகள் பயிற்சி

பதிவு செய்த நேரம்:2012-07-02 12:32:49

கூடலூர், திராட்சை விவசாயத்தில் அதிக மகசூல் பெறுவது குறித்து அணைப்பட்டி பகுதி விவசாயிகளுக்கு தோட்டக்கலைக் கல்லூரி மாணவிகள் தொழில் நுட்ப பயிற்சி அளித்தனர். பெரியகுளம் தோட்ட கலைக்கல்லூரி நான்காமாண்டு மாணவிகள், கள பயிற்சிக்காக கம்பம் அருகே உள்ள அணைப்பட்டியில் முகாமிட்டு திராட்சை தோட்டங்களில் பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.
தோட்டகலைத்துறை மாணவிகளுக்கு கம்பம் வட்டார தோட்டக்கலை அலுவலர் மனோகரன்,

உதவி தோட்டகலை அலுவலர்கள் மோகன்ராஜ், வேல்முருகன் பயிற்சி அளித்து வருகின்றனர். திராட்சை சாகுபடியில் அதிக மகசூல் பெறுவது குறித்து விவசாயிகளுக்கு மாணவிகள் பயிற்சி அளித்தனர்.
ஜிப்ராலிக் ஆசிட் என்னும் பயிர் ஊக்கியை பயன்படுத்தினால் திராட்சை பழங்கள் திரட்சியாகவும், தரமானதாகவும் வளரும். எனவே திராட்சை பிஞ்சுகளில் இந்த பயிர் ஊக்கியை நனைப்பது குறித்து மாணவிகள் அபர்ணா சீனிவாசன், கயல்விழி, பிருந்தா, தீபிகா, அபிநயா, ஆஷாடெலோன்சி, அஸ்வினி, திவ்யா, ஜெயபிரபா, தாரணி, கவிதா ஆகியோர் விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளித்தனர். இந்த செய்முறை பயிற்சியில் ஏராளமான திராட்சை விவசாயிகள் பங்கேற்றனர்.

## பருத்தியில் மாவுப்பூச்சி தாக்குதல் தடுக்க விவசாயிகளுக்கு யோசனை

பதிவு செய்த நேரம்:2012-07-02 12:32:41

பெரியகுளம், பருத்தி, கத்தரி, வெண்டை, பப்பாளி, மரவள்ளி, மா, கொய்யா போன்ற பயிர்களில் மாவுப்பூச்சிகள் அதிக சேதத்தை ஏற்படுத்துகின்றன.
இதனை கட்டுப்படுத்தும் முறை குறித்து பெரியகுளம் வேளாண்மை அலுவலர் பெரியசாமி கூறியது:
பருத்தியில் காணப்படும் மாவுப்பூச்சிகள் 2.5 முதல் 6 மிமீ நீளமுள்ளது. பெரும்பாலான பூச்சிகள் இளஞ்சிவப்பு நிறத்திலும் சிலவகை வெள்ளை, கரு ஊதா. மஞ்சள் நிறத்திலும் நீள்வட்டமாக காணப் படும். மாவுப்பூச்சி தாக்குதலால் இலை மஞ்சள் நிறமாக மாறும், இலைகள் வளைந் தும், நெளிந்தும் குருத்தில் சிறுத்து திருகி காணப்படும். இலையின் அடிப்பகுதி, குருத்து, கிளைகள் மற்றும் தண்டுப்பகுதிகளில் வெள்ளையாக அடை போல மாவுப்பூச்சி படர்ந்தி ருக்கும். அதிக தாக்குதலில் செடிகள் இலைகள் இன்றி வாடி கருகி விடும்.
மாவுப்பூச்சி தாக்காமல் தடுக்க, களைகளை அகற்றி வயல்களை சுத்தமாக வைக்க வேண்டும். இளம்பருவத்திலிருந்தே பருத்தி செடிகளில் மாவுப்பூச்சி, எறும்புகளின் நடமாட்டத்தை கண்காணிக்க வேண்டும். தாக்குதல் குறைவாக இருக்கும்போதே பயிர் பாதுகாப்பு முறை களை கையாள வேண்டும். சேதம் குறைவாக இருக்கும்போது இயற்கை பூச்சிக்கொல்லிகள் ஏதேனும் ஒன்றை தாக்கப்பட்ட செடி கள், அதனை சுற்றியுள்ள பகுதியில் தெளிக்கவும்.
வேப்பெண்ணெய் 2 சதம், வேப்பங்கொட்டை பருப்புச்சாறு 5 சதம், சேதம் அதிகமாக காணப்படும்போது புரபனோபாஸ் 2மி.லி, குளோர்பைரிபாஸ் 2.5மி.லி, டைமெத்தோயேட் 2மி.லி மீன் எண்ணெய் சோப்பு 40கி/ லி ஒரே பூச்சிக்கொல்லியை திரும்ப திரும்ப உபயோகிக்காமல் சுழற்சி முறையில் வெவ் வேறு பூச்சிக்கொல்லிகளை தேவைக்கேற்ப உபயோகிக்கவும்.

தேவைப்பட்டால் மீன் எண்ணெய் சோப்பு டன் பூச்சிக்கொல்லிகளை சேர்த்து தெளித்து பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## பசுந்தீவன சாகுபடிக்கு 100 சதவீத மானியம்

பதிவு செய்த நேரம்:2012-07-02 12:36:46

விருதுநகர்,: பசுந்தீவனம் சாகுபடி செய்ய விருப்பமுள்ள விவசாயிகளுக்கு 100 சதவீத மானியம் அளிக்கப்படும் என கால்நடைத்துறை தெரிவித்துள்ளது.

கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இயக்குநர் சிவானந்தம் கூறுகையில், `2வது வெண்மை புரட்சிக்காக அரசு இலவச கறவைப்பசுகளை ஏழை விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. கால்நடைகளின் உற்பத்தி திறனை மேம்படுத்த, பசுந்தீவனம் வழங்குவது அவசியம். கடந்த ஆண்டு 8 ஆயிரம் ஏக்கர் பரப்பில் அதிக மகசூல் தரக்கூடிய தீவனப்பயிர்கள் சாகுபடி செய்ய 100 சதவீத மானியத்திற்காக ரூ.20 கோடி நிதி ஒதுக்கப்பட்டது.

விருதுநகர் மாவட்டத்தில் 560 ஏக்கரில் தீவனப்பயிர் வளர்ப்பிற்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிலும் 100 சதவீத மானியத்தில் தீவனப்பயிர் மகசூல் செய்ய ரூ.20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. விருதுநகர் மாவட்டத்தில் 560 ஏக்கரில் அதிக மகசூல் தரக்கூடிய நேப்பியர் ஒட்டுப்புல் ரகங்களான கோ-3, கோ-4 சாகுபடி செய்ய 1/4 ஏக்கருக்கு 100 சதவீத மானியமாக ரூ.3 ஆயிரம் வழங்கப்படும். கால்நடை தீவனப்பயிர் சாகுபடி செய்ய விருப்பமுள்ள விவசாயிகள், அருகில் உள்ள கால்நடை நிலையங்களில், கால்நடை உதவி மருத்துவரிடம் விண்ணப்பம் அளித்து பயன்பெறலாம் என தெரிவித்தார்.

---

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## *அடுத்த 2012–13 சந்தை பருவத்தில் சர்க்கரை உற்பத்தி 2.50 கோடி டன்*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு,புதுடெல்லி*

*எதிர் வரும் அக்டோபர் முதல் தேதி தொடங்கும் 2012–13 ஆம் சந்தைப்படுத்துதல் ஆண்டில் நாட்டின் சர்க்கரை உற்பத்தி 2.50 கோடி டன்னாக இருக்கும் என இந்திய சர்க்கரை ஆலை சங்கம் மதிப்பீடு செய்துள்ளது. இது நடப்பு சந்தைப்படுத்துதல் ஆண்டின் உற்பத்தி மதிப்பீடான*

*2.60 கோடி டன்னை விட 10 லட்சம் டன் குறைவாக இருக்குமென அந்த மதிப்பீட்டில் கூறப்பட்டுள்ளது.*

*அடுத்த ஆண்டிற்கான சர்க்கரை உற்பத்தி இலக்கில் உத்தரபிரதேச மாநிலம் 78 லட்சம் டன்னும், மஹாராஷ்டிரா 76 லட்சம் டன்னும், கர்நாடக மாநிலம் 30 லட்சம் டன்னும், தமிழ்நாடு 25 லட்சம் டன்னும், குஜராத் மற்றும் ஆந்திர பிரதேச மாநிலங்கள் தலா 10 லட்சம் டன்னும் உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*இருப்பினும், அடுத்த சில மாதங்களின் மழையளவை பொறுத்தே சர்க்கரை உற்பத்தி அமையுமென்பதால், கடந்த கால புள்ளி விபரங்கள் மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் வெளிவந்துள்ளவை முதற்கட்ட மதிப்பீடுகளே என இந்திய சர்க்கரை ஆலை சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.*

*நடப்பு ஆண்டில் தேவையைக்காட்டிலும் 40 லட்சம் டன் அதிகமாக 2.60 கோடி டன் சர்க்கரை உற்பத்தியாகும் என்பதால் எஞ்சியவை ஏற்றுமதி வாய்ப்பினை உருவாக்கும் என கூறப்படுகிறது.*

## *குன்னூர், கோத்தகிரி பகுதி தொழிற்சாலைகளில் பச்சை தேயிலைக்கு விலை நிர்ணயம்*




ஊட்டியில் கடந்த சில வாரங்களாக விட்டு, விட்டு மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் ஊட்டி கோடப்பமந்து பகுதியில் பயிரிட்டுள்ள கேரட் செடிகளை நோய்கள் தாக்காமல் இருக்க மருந்து அடிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள விவசாயியை படத்தில் காணலாம்.

*குன்னூர், ஜூலை.3–*

*குன்னூர், கோத்தகிரி பகுதியில் உள்ள தேயிலை தொழிற்சாலைகளுக்கு வினியோகிக்கப்படும்*

பச்சை தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்யப் பட்டு உள்ளது.

உற்பத்தி அதிகரிப்பு

நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு தேயிலை விவசாயி கள் பெரும்பாலும் தங்கள் தோட்டங்களில் அறுவடை செய்யும் பச்சை தேயிலையை சிறு தேயிலை தொழிற் சாலை களுக்கே வழங்கி வருகின்ற னர்.

பச்சை தேயிலைக்கு வார விலை, மாத விலை என்று இரு விலைகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. கடந்த சில வாரங்களாக தேயிலை மகசூல் அதிகரித்துள்ளதால் தேயிலை உற்பத்தி அதி கரித்துள்ளது.

21 லட்சம் கிலோ தேயிலை தூள்

இதன் காரணமாக தேயிலை தூளுக்கு ஏல மையத்தில் விலைச்சரிவு ஏற்பட்டு வருகிறது. இந்த விலைச்சரிவு பச்சை தேயிலை விலையிலும் எதிராலித்து வருகிறது. கடந்த வியாழன், வெள்ளி இரு நாட்கள் நடைபெற்ற தேயிலை ஏலத்தில் இந்த ஆண்டின் 6 மாதங்களில் அதிகபட்ச தேயிலை வரத்தான 21 லட்சம் கிலோ தேயிலை தூள் வந் தது.

ஏலத்தில் விலைச்சரிவும் ஏற்பட்டது. இதன் எதிரொலி யாக கோத்தகிரி பகுதியில் கடந்த 30–ந் தேதி சனிக்கிழமை வார விலையாக சாதாரண வகை பச்சை தேயிலைக்கு 10 ரூபாய் முன் பணமாக விவசாயிகளுக்கு கொடுக்கப் பட்டது.

மாத விலை, வாரவிலை

ஒரு சில தொழிற்சாலை களில் 12 ரூபாய் வழங்கப்பட்ட தாக விவசாயிகள் கூறினர். முதல் தரமான ‘ஏ’ கிரேடு பச்சை தேயிலைக்கு 19 ரூபாய், 20 ரூபாய் என்று வழங்கப் பட்டது. ‘பி’ கிரேடுக்கு 15 ரூபாய் என்றும் 16 ரூபாய் என்றும் வழங்கப்பட்டது.மாத விலையாக பச்சை தேயிலைக்கு 14 ரூபாய் மற்றும் 15 ரூபாயாக விலை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளதாக பச்சை தேயிலை ஏஜெண்டுகள் கூறினர்.

தேயிலை மகசூல் அதிகரிக் கும் போது தேயிலைக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டு வருகிறது. இருப்பினும் மகசூல் அதிகரித்து இருந்தாலும், கூலி உயர்வு, இடு பொருட்களின் விலை உயர்வு இவற்றால் விவசாயிகளுக்கு கிடைக்கும் விலை குறைவாக உள்ளதாக கூறப்படுகிறது.

உர விலை

இடு பொருட்களின் விலை அதிகரித்துள்ளதால் தோட்டங்களில் உரமிட விவசாயிகள் தயக்கம் காட்டி வருகின்றனர். அந்தந்த பருவத் தில் உரமிட்டால் தரமான பச்சை தேயிலையை விவ சாயிகள் பறிக்க முடியும்.

இதனை கருத்தில் உர விலையை குறைக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

## பச்சை தேங்காயை அரசே கொள்முதல் செய்ய வேண்டும் விவசாயிகள் கோரிக்கை

கொழிஞ்சாம்பாறை,
ஜூலை.3–
கேரள அரசு பச்சைத் தேங்காய்களை கொள்முதல் செய்து தென்னை விவசாயிகளை காப்பாற்ற முன் வர வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தென்னையை நம்பி உள்ளனர்

கொழிஞ்சாம்பாறையை சேர்ந்த தென்னை விவசாயியான பொன்ராஜ், சம்பத்குமார் கூறியதாவது:

இந்த பகுதியில் பாரம்பரிய விவசாயங்களான நெல், வாழை, கரும்பு, நிலக்கடலை, பருத்தி போன்ற விவசாயங்கள் அழிந்து விட்டது. தற்போது பெயருக்கு நெல் விவசாயம் செய்யப்படுகிறது. பெரும்பாலும் இப்பகுதி விவசாயிகள் தென்னையை நம்பி உள்ளார்கள். இந்த நிலையில் தற்போது தேங்காய் விலை மிகவும் குறைந்து உள்ளது.

1 தேங்காய் 6 ரூபாய் கொடுத்து வாங்கிய வியாபாரிகள் தற்போது 2 ரூபாய் 30 காசு முதல் 3 ரூபாய்க்கு தான் வாங்குகிறார்கள். பாதிக்கு மேல் விலை கொடுத்து தேங்காய்களை கேட்பதற்கே ஆளில்லாத நிலை உள்ளது. இதனால் தோப்புகளில் லட்சக்கணக்கில் தேங்காய்கள் குவிக்கப்பட்டுள்ளது.

தென்னந்தோப்புகள் அழிந்து வருகின்றன

விவசாயிகளிடம் அரசு கொப்பரை தேங்காய்களை மட்டுமே கொள்முதல் செய்கிறது. இதனால் தென்னை விவசாயிகள் வாங்கிய கடனை கூட கட்ட முடியாமல் தவிப்பதுடன் வாழ்வாதாரம் பாதிக் கும் நிலையில் உள்ளார்கள். இந்த நிலையில் இருந்து விவசாயிகளை காப்பாற்ற தென் னை விவசாயிகளிடம் இருந்து கேரளா அரசு தேங்காய்களை 1 கிலோ 20 ரூபாய்க்கு கொள்முதல் செய்ய முன் வர வேண்டும்.

இல்லை என்றால் தென்னை விவசாயத்தையும் விவசாயிகள் புறக்கணிக்கும் நிலை வரும். தற்போதே பல ஆயிரம் தென்னந்தோப்புகள் அழிக்கப்பட்டு வீட்டுமனை நிலங்களாக மாறிஉள்ளது. தேங்காய்க்கு நியாய விலை கிடைக்க கேரள அரசு பச்சை தேங்காயை கொள்முதல் செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.